## வாரத்தில் ஓர் முத்து!

12 ஜனவரி 2010

சகரியா பூணன்

# 37. தாகம் கொண்டவர்களுக்கே தேவபக்தியான வாழ்க்கை!

யோவான் 7:37-ல் ஒருவன் பரிசுத்தாவியின் நிறைவைப் பெறும்பொருட்டு இயேசு சத்தமிட்டு, “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்” எனக்கூறினார் என வாசிக்கிறோம். ஆம், தாகமில்லாத ஒருவன் இயேசுவினிடத்தில் கிட்டிச்சேரவே முடியாது. ஒருவன் அவரிடத்தில் நெருங்கிச் சேர்ந்திட இவ்வுலகத்தின் எந்த தகுதியும் அவனுக்குத் தேவையேயில்லை. ஒருவேளை இவ்வுலகத்தில் நீங்கள் ஓர் மிக அற்பமான கொடிய பாவியாகக்கூட இருக்கலாம். ஆனால் நீங்கள் இயேசுவிடம் கிட்டிச்சேரும்படி தீராத தாகம் கொண்டிருந்தால், அவரை நீங்கள் கிட்டிச் சேர்ந்துவிடுவீர்கள்! எதற்குரிய தாகம்? சுகம் வேண்டும், பணம் வேண்டும், பிள்ளைகள் படித்து உயரவேண்டும், பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத்தரம் அமையவேண்டும், நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டும் . . . போன்ற தாகமா? இதுபோன்ற உலக காரியங்களுக்காக தாகம் கொண்டவர்கள் இப்பூமியில் ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்களைப் பார்த்து, “என்னிடத்தில் வாருங்கள்!” என இயேசு ஒருக்காலும் அழைப்பதேயில்லை. மாறாக, தன் ஜீவியத்தில் பரிசுத்தத்தையும், நீதியையும் கொண்டுவரும் பரிசுத்தாவியின் வல்லமைக்காய் தாகம் கொண்டவர்களையே இயேசு அழைத்தார். இவ்வாறு, இன்று எத்தனைபேர் ஓர் நேர்மையான நீதியுள்ள வாழ்க்கைக்கு தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் தன் வருமான வரியை நேர்மையாகக் கட்டவேண்டும் என தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் எந்த மனுஷரிடத்திலும் கடன்படாத ஜீவியத்திற்காய் தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் பண விஷயத்தில் நூற்றுக்கு நூறு நேர்மையாய் இருக்கவேண்டுமென தாகம் கொண்டிருக்கிறார்கள்? எத்தனைபேர் தங்கள் பேச்சினாலோ அல்லது செயலினாலோ ஒருவருக்குக்கூட தீங்கு செய்யக்கூடாதென தாகம் கொண்டிருக்கிறார்கள்? இவ்வாறெல்லாம் ஓர் மனிதனுடைய ஜீவியத்தில் பசிதாகம் ஏற்பட்டுவிட்டால் அவன் பாக்கியவான்! அவன் நிச்சயமாய் திருப்தி அடைவான்!! (மத்.5:6).

நாம் தேவநீதியை அடைவதற்கு இந்தவசனமே பரலோக ராஜ்யத்தின் சூத்திரமாகும்! ஓர் நேர் விகிதாச்சாரத்தைப்போல, நாம் எவ்வளவு தாகம் கொண்டிருக்கிறோமோ அந்தளவு மாத்திரமே தேவ நீதியையும் சுதந்தரித்திட முடியும். ஆகவே, நீங்கள் எவ்வளவு பரிசுத்தமாய் வாழ்கிறீர்கள்? என்ற கேள்விக்குரிய விடை, பரிசுத்த ஜீவியத்திற்கு நீங்கள் எவ்வளவு தாகம் கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்வியைப் பொருத்ததேயாகும்!

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 )